திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் ; தலைவரவர்களே, 31-1-1976-லிருந்து இரண்டாம்வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளைமுதல் வகுப்புமாஜிஸ்ட்ரேட்டுகளாக அப்கிரேடு செய்ததாகவோ அல்லது அதற்கான செயற்குறிப்பு இருந்ததாகவோ அறிகிறேன். ஆகவே இதுவரையில் இல்லை என்றால் இனிமேலாவது இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளை அப்கிரேடு செய்து, அவரவர்களுடைய அனுபவம், தகுதி, திறமைகளுக்கு ஏற்ப அதிகாரங்களை வழங்கி, எந்தெந்த அதிகாரங்கள் யார் யாருக்கு என்று வரையறை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

The ·Hon. Thiru K. NARAYANSWAMY MUDALIAR : This Government wants to assure that even if the proposal of integration is given effect to the court of SDM will not be abolished but will be converted into first class magistrates trying first class cases.

கல்லூரிகளில் தமிழ் பயிற்றுனர்கள்

* 804 வினா திரு. என். கிட்டப்பா; மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-ம் ஆண்டு, தமிழக அரசு தேர்வாணைக் குழுவினால் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்றுநர் பணிக்குத்தேர்ந்தெடுக்கப்பட்ட 120 நபர்களும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்களா?

(ஆ) இல்லையெனில் அதற்குரிய காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை. இதுவரை 109 பேர்கள் தான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

(ஆ) இன்னும் 10 பேர்கள் பணியில் அமர்த்தப்பட வேண்டும். இவர்கள் பணியிடங்கள் காலியானபின் அமர்த்தப் படுவர். ஒருவருக்குத் தேர்வு ஆணைக்குழுவில் இருந்து மேல் விவரம் கிடைத்த பின்புதான் நியமன ஆணை வழங்கப்பட வேண்டும்.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, இங்கே 10 பேர்கள் இன்னும் அத்தகைய பணியில் அமர்த்தப்படவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அண்மையிலே கூட 10 பிளஸ் 2 பிளஸ் 3 எகின்ற திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது. அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டால்

1978 ஏப்ரல் 5]

பணியில் அமர்த்தப்படவேண்டிய அவர்கள் பாதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புவதோடு அவர்களை பணியில் அமர்த்த விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; தலைவரவர்களே, விரைவில் அந்த விவரங்கள் கிடைத்தவுடன் அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா ; தலைவரவர்களே, 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படும்போது தற்போது பணியில் இருப்பவர்கள் கூட பாதிக்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; அவர்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படாது என்ற வாக்குறுதியை இந்த அரசு அவர்களுக்கு தந்திருக்கிறது; பலதடவை இந்த மன்றத்திலும் வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது.

Part-time B.E. Degree Courses

*805. Q.—Thiru R.E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal to raise the present strength of candidates in each Engineering branch from 30 candidates to 60 candidates from working class Engineering Diploma holders for part-time bachelor of Engineering Course in Tamil Nadu Engineering Colleges?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை;

(முற்பகல் 9.30)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பொறியியல் கல்லூரிகளிலே பகுதி நேர படிப்பிற்குச் சேருவதற்காக மாணவர்களுக்கு என்று இடம் ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படுகின்ற நேரத்தில் சென்னைக் கல்லூரியிலே இடம் இல்லாமலும், மற்ற வெளி இடங்களிலே இட வசதி காலியாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறதே. ஆகையால் சென்னையில் அதிகமான அளவுக்கு இடவசதியை இந்த பகுதிநேர படிப்பிற்காக ஒதுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒதுக்கப்பட்ட இடங்கள் எல்லாம் பூர்த்தியாகி இப்போது மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியூரிலும்,